ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கோயில் திருமொழி ॥

## (வடகலை ஸம்ப்ரதாயம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| **1** | பெரிய திருமொழித் தனியன்கள் | **2** |
| **2** | வாடினேன் | **4** |
| **3** | தாயே தந்தை | **8** |
| **4** | நண்ணாத | **12** |
| **5** | தூவிரிய | **16** |
| **6** | நும்மைத் தொழுதோம் | **20** |
| **7** | உந்திமேல் | **24** |
| **8** | துறப்பேன் | **28** |
| **9** | கறவா மடநாகு | **32** |
| **10** | தெள்ளியீர் | **36** |
| **11** | அக்கும் புலியின் | **40** |
| **12** | காதில் கடிப்பு | **44** |
| **13** | நீள் நாகம் | **48** |
| **14** | மாற்றமுள | **52** |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரிய திருமொழித் தனியன்கள்

## தனியன்கள்

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் ।
யஸ்ய கோ$_3$பி$_4$: ப்ரகாஶாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ॥

வாழி பரகாலன் வாழி கலிகன்றி ⋆
வாழி குறையலூர் வாழ் வேந்தன் ⋆
வாழியரோ மாயோனை வாள் வலியால் மந்திரம் கொள் ⋆
மங்கையர் கோன் தூயோன் சுடர் மான வேல்

நெஞ்சுக்கிருள் கடி தீபம் அடங்கா நெடும் பிறவி ⋆
நஞ்சுக்கு நல்ல அமுதம் தமிழ் நன்னூல் துறைகள் ⋆
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம் ⋆
பரசமயப் பஞ்சுக் கனலின் பொறி ⋆
பரகாலன் பனுவல்களே

எங்கள் கதியே ! இராமாநுச முநியே ! ⋆
சங்கை கெடுத்தாண்ட தவராசா ⋆
பொங்கு புகழ் மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் ⋆
தங்கு மனம் நீ எனக்குத் தா

மாலைத் தனியே வழி பறிக்க வேணும் என்று ⋆
கோலிப் பதிவிருந்த கொற்றவனே ⋆
வேலை அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத் ⋆
துணித்தருள வேணும் துணிந்து

## பெரிய திருமொழித் தனியன்கள் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.1 – வாடினேன்

‡ வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் ⋆
பெருந்துயர் இடும்பையில் பிறந்து ⋆
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு ⋆
அவர் தரும் கலவியே கருதி ⋆
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் ⋆
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து ⋆
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.1** ‖ 1

‡ ஆவியே ! அமுதே ! என நினைந்துருகி ⋆
அவர் அவர் பணை முலை துணையாப் ⋆
பாவியேன் உணராதெத்தனை பகலும் ⋆
பழுது போய் ஒழிந்தன நாள்கள் ⋆
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுது ⋆
என் நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.2** ‖ 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் ⋆
தெரிவைமார் உருவமே மருவி ⋆
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ⋆
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் ⋆
காமனார் தாதை நம்முடை அடிகள் ⋆

தம் அடைந்தார் மனத்திருப்பார் ⋆
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.3** ‖ 3

வென்றியே வேண்டி வீழ் பொருட்கிரங்கி ⋆
வேற்கணார் கலவியே கருதி ⋆
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன் ⋆
என் செய்கேன் நெடு விசும்பணவும் ⋆
பன்றியாய் அன்று பாரகம் கீண்ட ⋆
பாழியான் ஆழியான் அருளே ⋆
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.4** ‖ 4

கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன் ⋆
கண்டவா திரி தந்தேன் ஏலும் ⋆
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கமைந்தேன் ⋆
சிக்கெனத் திருவருள் பெற்றேன் ⋆
உள் எலாம் உருகிக் குரல் தழுத்தொழிந்தேன் ⋆
உடம்பெலாம் கண்ண நீர் சோர ⋆
நள் இருள் அளவும் பகலும் நான் அழைப்பன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.5** ‖ 5

‡ எம் பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் ⋆
எனக்கரசென்னுடை வாணாள் ⋆
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி ⋆
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல் ⋆
வம்புலாம் சோலை மா மதிள் ⋆
தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி ⋆

நம்பிகாள் ! உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.6** ॥ 6

இற்பிறப்பறியீர் இவர் அவர் என்னீர் ⋆
இன்னதோர் தன்மை என்றுணரீர் ⋆
கற்பகம் புலவர் களைகண் என்றுலகில் ⋆
கண்டவா தொண்டரைப் பாடும் ⋆
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுமின் ⋆
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.7** ॥ 7

கற்றிலேன் கலைகள் ஐம் புலன் கருதும் ⋆
கருத்துளே திருத்தினேன் மனத்தை ⋆
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை ⋆
பெரு நிலத்தார் உயிர்க்கெல்லாம் ⋆
செற்றமே வேண்டித் திரி தருவேன் தவிர்ந்தேன் ⋆
செல் கதிக்குய்யும் ஆறெண்ணி ⋆
நற்றுணை ஆகப் பற்றினேன் அடியேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.8** ॥ 8

‡ குலம் தரும் செல்வம் தந்திடும் ⋆
அடியார் படு துயர் ஆயின எல்லாம் ⋆
நிலந் தரம் செய்யும் நீள் விசும்பருளும் ⋆
அருளொடு பெரு நிலம் அளிக்கும் ⋆
வலம் தரும் மற்றும் தந்திடும் ⋆
பெற்ற தாயினும் ஆயின செய்யும் ⋆

நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.9** ॥ 9

‡ மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் ⋆
மங்கையார் வாள் கலிகன்றி ⋆
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன் மாலை ⋆
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர் ! ⋆
துஞ்சும் போதழைமின் துயர் வரில் நினைமின் ⋆
துயர் இலீர் சொல்லிலும் நன்றாம் ⋆
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.10** ॥ 10

அடிவரவு — வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி

வாடினேன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.9 – தாயே தந்தை

‡ தாயே தந்தை என்றும் ⋆
தாரமே கிளை மக்கள் என்றும் ⋆
நோயே பட்டொழிந்தேன் ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
வேயேய் பூம் பொழில் சூழ் ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆
நாயேன் வந்தடைந்தேன் ⋆
நல்கி ஆள் என்னைக் கொண்டருளே ॥ **1.9.1** ॥ 11

மானேய் கண் மடவார் ⋆
மயக்கில் பட்டு ⋆
மா நிலத்து நானே நானாவித ⋆
நரகம் புகும் பாவம் செய்தேன் ⋆
தேனேய் பூம் பொழில் சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் ஆனாய் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.2** ॥ 12

கொன்றேன் பல் உயிரைக் ⋆
குறிக்கோள் ஒன்றிலாமையினால் ⋆
என்றேனும் இரந்தார்க்கு ⋆
இனிதாக உரைத்தறியேன் ⋆
குன்றேய் மேகம் அதிர் ⋆

குளிர் மா மலை வேங்கடவா ! ⋆
அன்றே வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.3** ॥ 13

குலம் தான் எத்தனையும் ⋆
பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன் ⋆
நலம் தான் ஒன்றும் இலேன் ⋆
நல்லதோர் அறம் செய்தும் இலேன் ⋆
நிலம் தோய் நீள் முகில் சேர் ⋆
நெறியார் திருவேங்கடவா ! ⋆
அலந்தேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.4** ॥ 14

எப் பாவம் பலவும் ⋆
இவையே செய்திளைத்தொழிந்தேன் ⋆
துப்பா ! நின் அடியே ⋆
தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் ⋆
செப்பார் திண்வரை சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் அப்பா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.5** ॥ 15

மண்ணாய் நீர் எரி கால் ⋆
மஞ்சுலாவும் ஆகாசமுமாம் ⋆
புண்ணார் ஆக்கை தன்னுள் ⋆
புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் ⋆
விண்ணார் நீள் சிகர ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆

அண்ணா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.6** ॥ 16

தெரியேன் பாலகனாய்ப் ⋆
பல தீமைகள் செய்தும் இட்டேன் ⋆
பெரியேன் ஆயின பின் ⋆
பிறர்க்கே உழைத்தேழை ஆனேன் ⋆
கரி சேர் பூம் பொழில் சூழ் ⋆
கன மா மலை வேங்கடவா ! ⋆
அரியே ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.7** ॥ 17

நோற்றேன் பல் பிறவி ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
ஏற்றேன் இப் பிறப்பே ⋆
இடர் உற்றனன் எம் பெருமான் ! ⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
குளிர் சோலை சூழ் வேங்கடவா ! ⋆
ஆற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.8** ॥ 18

பற்றேல் ஒன்றும் இலேன் ⋆
பாவமே செய்து பாவி ஆனேன் ⋆
மற்றேல் ஒன்றறியேன் ⋆
மாயனே ! எங்கள் மாதவனே ! ⋆
கல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
கமலச்சுனை வேங்கடவா ! ⋆

அற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.9** ‖ 19

‡ கண்ணாய் ஏழ் உலகுக்குயிராய ⋆
எங்கார் வண்ணனை ⋆
விண்ணோர் தாம் பரவும் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
திண்ணார் மாடங்கள் சூழ் ⋆
திரு மங்கையர் கோன் கலியன் ⋆
பண்ணார் பாடல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ‖ **1.9.10** ‖ 20

அடிவரவு — தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

தாயே தந்தை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.6 – நண்ணாத

‡ நண்ணாத ⋆
வாள் அவுணர் இடைப் புக்கு ⋆
வானவரைப் பெண் ஆகி ⋆
அமுதூட்டும் பெருமானார் ⋆
மருவினிய தண்ணார்ந்த கடல் மல்லைத் ⋆
தல சயனத்துறைவாரை ⋆
எண்ணாதே இருப்பாரை ⋆
இறைப் பொழுதும் எண்ணோமே ‖ **2.6.1** ‖ 21

பார் வண்ண மட மங்கை ⋆
பனி நன் மா மலர்க் கிழத்தி ⋆
நீர் வண்ணன் மார்வத்தில் ⋆
இருக்கையை முன் நினைந்தவன் ஊர் ⋆
கார் வண்ண முது முந்நீர்க் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
ஆர் எண்ணும் நெஞ்சுடையார் ⋆
அவர் எம்மை ஆள்வாரே ‖ **2.6.2** ‖ 22

‡ ஏனத்தின் உருவாகி ⋆
நில மங்கை எழில் கொண்டான் ⋆
வானத்தில் அவர் முறையால் ⋆
மகிழ்ந்தேத்தி வலம் கொள்ள ⋆
கானத்தின் கடல் மல்லைத் ⋆

தல சயனத்துறைகின்ற ⋆
ஞானத்தின் ஒளி உருவை ⋆
நினைவார் என் நாயகரே ‖ **2.6.3** ‖ 23

விண்டாரை வென்றாவி ⋆
விலங்குண்ண மெல் இயலார் ⋆
கொண்டாடும் மல் அகலம் ⋆
அழல் ஏற வெஞ்சமத்துக் கண்டாரை ⋆
கடல் மல்லைத் தல சயனத்து ⋆
உறைவாரைக் ⋆
கொண்டாடும் நெஞ்சுடையார் ⋆
அவர் எங்கள் குல தெய்வமே ‖ **2.6.4** ‖ 24

பிச்சச் சிறு பீலிச் ⋆
சமண் குண்டர் முதலாயோர் ⋆
விச்சைக்கிறை என்னும் ⋆
அவ்விறையைப் பணியாதே ⋆
கச்சிக் கிடந்தவன் ஊர் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
நச்சித் தொழுவாரை ⋆
நச்சென்தன் நல் நெஞ்சே ! ‖ **2.6.5** ‖ 25

புலன் கொள் நிதிக் குவையோடு ⋆
புழைக் கை மா களிற்றினமும் ⋆
நலம் கொள் நவமணிக் குவையும் ⋆
சுமந்தெங்கும் நான்றொசிந்து ⋆
கலங்கள் இயங்கும் மல்லைக் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆

வலங்கொள் மனத்தார் அவரை ⋆
வலங்கொள் என் மட நெஞ்சே ! ॥ **2.6.6** ॥ 26

பஞ்சிச் சிறு கூழை ⋆
உருவாகி மருவாத ⋆
வஞ்சப் பெண் நஞ்சுண்ட ⋆
அண்ணல் முன் நண்ணாத ⋆
கஞ்சைக் கடந்தவன் ஊர் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
நெஞ்சில் தொழுவாரைத் ⋆
தொழுவாய் என் தூய் நெஞ்சே ! ॥ **2.6.7** ॥ 27

செழு நீர் மலர்க் கமலம் ⋆
திரை உந்து வன் பகட்டால் ⋆
உழு நீர் வயல் உழவர் உழ ⋆
பின் முன் பிழைத்தெழுந்த ⋆
கழு நீர் கடி கமழும் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
தொழு நீர் மனத்தவரைத் ⋆
தொழுவாய் என் தூய் நெஞ்சே ॥ **2.6.8** ॥ 28

பிணங்கள் இடு காடதனுள் ⋆
நடமாடு பிஞ்ஞகனோடு ⋆
இணங்கு திருச் சக்கரத்து ⋆
எம் பெருமானார்க்கிடம் ⋆
விசும்பில் கணங்கள் இயங்கும் மல்லைக் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆

வணங்கும் மனத்தார் அவரை ⋆
வணங்கென்தன் மட நெஞ்சே ॥ **2.6.9** ॥ 29

‡ கடி கமழும் நெடு மறுகில் ⋆
கடல் மல்லைத் தல சயனத்து ⋆
அடிகள் அடியே நினையும் ⋆
அடியவர்கள் தம் அடியான் ⋆
வடி கொள் நெடு வேல் வலவன் ⋆
கலிகன்றி ஒலி வல்லார் ⋆
முடி கொள் நெடு மன்னவர் தம் ⋆
முதல்வர் முதல் ஆவாரே ॥ **2.6.10** ॥ 30

அடிவரவு — நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி செழுநீர் பிணங்கள் கடி திவளும்

நண்ணாத முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 3.6 – தூவிரிய

‡ தூவிரிய மலர் உழக்கித் ⋆
துணையோடும் பிரியாதே ⋆
பூவிரிய மது நுகரும் ⋆
பொறி வரிய சிறு வண்டே ! ⋆
தீவிரிய மறை வளர்க்கும் ⋆
புகழ் ஆளர் திருவாலி ⋆
ஏவரி வெம் சிலையானுக்கு ⋆
என் நிலைமை உரையாயே ‖ **3.6.1** ‖ 31

பிணி அவிழும் நறு நீல ⋆
மலர் கிழியப் பெடையோடும் ⋆
அணிமலர் மேல் மது நுகரும் ⋆
அறு கால சிறு வண்டே ! ⋆
மணி கெழுநீர் மருங்கலரும் ⋆
வயல் ஆலி மணவாளன் ⋆
பணி அறியேன் நீ சென்று ⋆
என் பயலை நோய் உரையாயே ‖ **3.6.2** ‖ 32

நீர் வானம் மண் எரி காலாய் ⋆
நின்ற நெடுமால் ⋆
தன் தார் ஆய நறுந் துளவம் ⋆
பெரும் தகையேற்கருளானே ⋆
சீர் ஆரும் வளர் பொழில் சூழ் ⋆

திருவாலி வயல் வாழும் ⋆
கூர் வாய சிறு குருகே ! ⋆
குறிப்பறிந்து கூறாயே ‖ **3.6.3** ‖ 33

தான் ஆக நினையானேல் ⋆
தன் நினைந்து நைவேற்கு ⋆
ஓர் மீன் ஆய கொடி நெடு வேள் ⋆
வலி செய்ய மெலிவேனோ ⋆
தேன் வாய வரி வண்டே ! ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆
ஆன் ஆயற்கென் உறு நோய் ⋆
அறியச் சென்றுரையாயே ‖ **3.6.4** ‖ 34

வாள் ஆய கண் பனிப்ப ⋆
மென் முலைகள் பொன் அரும்ப ⋆
நாள் நாளும் ⋆
நின் நினைந்து நைவேற்கு ⋆
ஓ ! மண் அளந்த தாளாளா ! தண் குடந்தை நகர் ஆளா ! ⋆
வரை எடுத்த தோளாளா ⋆
என் தனக்கு ⋆
ஓர் துணையாளன் ஆகாயே ‖ **3.6.5** ‖ 35

தார் ஆய தண் துளவ ⋆
வண்டுழுத வரை மார்பன் ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த ⋆
புட்பாகன் என் அம்மான் ⋆
தேர் ஆரும் நெடு வீதித் ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆

கார் ஆயன் என்னுடைய ⋆
கன வளையும் கவர்வானோ ॥ **3.6.6** ॥ 36

கொண்டரவத் திரை உலவு ⋆
குரை கடல் மேல் குலவரை போல் ⋆
பண்டரவின் அணைக் கிடந்து ⋆
பார் அளந்த பண்பாளா ! ⋆
வண்டமரும் வளர் பொழில் சூழ் ⋆
வயல் ஆலி மைந்தா ! ⋆
என் கண் துயில் நீ கொண்டாய்க்கு ⋆
என் கன வளையும் கடவேனோ ॥ **3.6.7** ॥ 37

குயில் ஆலும் வளர் பொழில் சூழ் ⋆
தண் குடந்தைக் குடம் ஆடீ ⋆
துயிலாத கண் இணையேன் ⋆
நின் நினைந்து துயர்வேனோ ! ⋆
முயல் ஆலும் இள மதிக்கே ⋆
வளை இழந்தேற்கு ⋆
இது நடுவே வயல் ஆலி மணவாளா ! ⋆
கொள்வாயோ மணி நிறமே ॥ **3.6.8** ॥ 38

நிலை ஆளா ! நின் வணங்க ⋆
வேண்டாயே ஆகிலும் ⋆
என் முலை ஆள ஒரு நாள் ⋆
உன் அகலத்தால் ஆளாயே ⋆
சிலை ஆளா ! மரம் எய்த திறல் ஆளா ! ⋆
திரு மெய்ய மலையாள ⋆

நீ ஆள ⋆
வளை ஆள மாட்டோமே ॥ **3.6.9** ॥ 39

‡ மை இலங்கு கருங்குவளை ⋆
மருங்கலரும் வயல் ஆலி ⋆
நெய் இலங்கு சுடர் ஆழிப் ⋆
படையானை நெடுமாலை ⋆
கை இலங்கு வேல் கலியன் ⋆
கண்டுரைத்த தமிழ் மாலை ⋆
ஐ இரண்டும் இவை வல்லார்க்கு ⋆
அரு வினைகள் அடையாவே ॥ **3.6.10** ॥ 40

அடிவரவு — தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலையாளா மையிலங்கு கள்வன்

தூவிரிய முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 4.9 – நும்மைத் தொழுதோம்

‡ நும்மைத் தொழுதோம் ⋆
நுந் தம் பணி செய்திருக்கும் நும் அடியோம் ⋆
இம்மைக்கின்பம் பெற்றோம் ⋆
எந்தாய் இந்தளூரீரே ⋆
எம்மைக் கடிதாக் கருமம் அருளி ⋆
ஆவா ! என்றிரங்கி ⋆
நம்மை ஒரு கால் காட்டி நடந்தால் ⋆
நாங்கள் உய்யோமே ‖ **4.9.1** ‖ 41

‡ சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே ! ⋆
மருவினிய மைந்தா ⋆
அந்தண் ஆலி மாலே ! ⋆
சோலை மழ களிறே ! ⋆
நந்தா விளக்கின் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ⋆
என் எந்தாய் ! இந்தளூராய் ! ⋆
அடியேற்கிறையும் இரங்காயே ! ‖ **4.9.2** ‖ 42

பேசுகின்றதிதுவே ⋆
வையம் ஈர் அடியால் அளந்த ⋆
மூசி வண்டு முரலும் ⋆
கண்ணி முடியீர் ⋆
உம்மைக் காணும் ஆசை என்னும் கடலில் வீழ்ந்து ⋆

இங்கயர்த்தோம் ⋆
அயலாரும் ஏசுகின்றதிதுவே காணும் ⋆
இந்தளூரீரே ! ‖ **4.9.3** ‖ 43

ஆசை வழுவாதேத்தும் ⋆
எமக்கிங்கிழுக்காய்த்து ⋆
அடியோர்க்குத் தேசம் அறிய ⋆
உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு ⋆
காசின் ஒளியில் திகழும் வண்ணம் ⋆
காட்டீர் எம் பெருமான் ⋆
வாசி வல்லீர் ! இந்தளூரீர் ! ⋆
வாழ்ந்தே போம் நீரே ! ‖ **4.9.4** ‖ 44

தீ எம் பெருமான் நீர் எம் பெருமான் ⋆
திசையும் இரு நிலனுமாய் ⋆
எம் பெருமான் ஆகி நின்றால் ⋆
அடியோம் காணோமால் ⋆
தா எம் பெருமான் ⋆
தந்தை தந்தை ஆவீர் ⋆
அடியோமுக்கே எம் பெருமான் அல்லீரோ நீர் ⋆
இந்தளூரீரே ! ‖ **4.9.5** ‖ 45

சொல்லாதொழியகில்லேன் ⋆
அறிந்த சொல்லில் ⋆
நும் அடியார் எல்லாரோடும் ஒக்க ⋆
எண்ணி இருந்தீர் அடியேனை ⋆
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் ⋆
நமக்கிவ்வுலகத்தில் ⋆

எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.6** ॥ 46

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள ⋆
எம்மைப் பணி அறியா விட்டீர் ⋆
இதனை வேறே சொன்னோம் ⋆
இந்தளூரீரே ! ⋆
காட்டீர் ஆனீர் ⋆
நுந்தம் அடிக்கள் காட்டில் ⋆
உமக்கிந்த நாட்டே வந்து தொண்டர் ஆன ⋆
நாங்கள் உய்யோமே ॥ **4.9.7** ॥ 47

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் ⋆
முழுதும் நிலை நின்ற ⋆
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் ⋆
வண்ணம் எண்ணுங்கால் ⋆
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் ⋆
புரையும் திருமேனி ⋆
இன்ன வண்ணம் என்று காட்டீர் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.8** ॥ 48

எந்தை தந்தை தம்மான் என்னென்று ⋆
எமர் ஏழ் ஏழ் அளவும் ⋆
வந்து நின்ற தொண்டரோர்க்கே ⋆
வாசி வல்லீரால் ⋆
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் ⋆
சிறிதும் திருமேனி ⋆

இந்த வண்ணம் என்று காட்டீர் ⋆
இந்தளூரீரே ॥ **4.9.9** ॥ 49

‡ ஏர் ஆர் பொழில் சூழ் ⋆
இந்தளூரில் எந்தை பெருமானை ⋆
கார் ஆர் புறவின் மங்கை வேந்தன் ⋆
கலியன் ஒலி செய்த ⋆
சீர் ஆர் இன் சொல் மாலை ⋆
கற்றுத் திரிவார் உலகத்தில் ⋆
ஆர் ஆர் அவரே ⋆
அமரர்க்கென்றும் அமரர் ஆவாரே ॥ **4.9.10** ॥ 50

அடிவரவு — நும்மை சிந்தை பேசுகின்றது ஆசை தீ சொல்லாது மாட்டீர் முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்

நும்மைத் தொழுதோம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5.4 – உந்திமேல்

‡ உந்திமேல் நான்முகனைப் படைத்தான் ⋆
உலகுண்டவன் எந்தை பெம்மான் ⋆
இமையோர்கள் தாதைக்கு ⋆
இடம் என்பரால் ⋆
சந்தினோடு மணியும் கொழிக்கும் ⋆
புனல் காவிரி ⋆
அந்தி போலும் நிறத்தார் வயல் சூழ் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.1** ‖ 51

வையம் உண்டால் இலை மேவும் மாயன் ⋆
மணி நீள் முடிப் ⋆
பை கொள் நாகத்தணையான் ⋆
பயிலும் இடம் என்பரால் ⋆
தையல் நல்லார் குழல் மாலையும் ⋆
மற்றவர் தட முலை ⋆
செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.2** ‖ 52

பண்டிவ் வையம் அளப்பான் சென்று ⋆
மாவலி கையில் நீர் கொண்ட ⋆
ஆழித் தடக் கைக் ⋆
குறளன் இடம் என்பரால் ⋆
வண்டு பாடும் மது வார் புனல் ⋆

வந்திழி காவிரி ⋆
அண்ட நாறும் பொழில் சூழ்ந்து ⋆
அழகார் தென் அரங்கமே ‖ **5.4.3** ‖ 53

விளைத்த வெம் போர் விறல் வாள் அரக்கன் ⋆
நகர் பாழ் பட ⋆
வளைத்த வல் வில் தடக்கை அவனுக்கு ⋆
இடம் என்பரால் ⋆
துளைக் கை யானை மருப்பும் ⋆
அகிலும் கொணர்ந்துந்தி ⋆
முன் திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.4** ‖ 54

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் ⋆
வான் புக ⋆
அம்பு தன்னால் முனிந்த ⋆
அழகன் இடம் என்பரால் ⋆
உம்பர் கோனும் உலகேழும் ⋆
வந்தீண்டி வணங்கும் ⋆
நல் செம் பொன் ஆரும் மதிள் சூழ்ந்து ⋆
அழகார் தென் அரங்கமே ‖ **5.4.5** ‖ 55

கலை உடுத்த அகல் அல்குல் ⋆
வன் பேய் மகள் தாய் என ⋆
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன் ⋆
வாழும் இடம் என்பரால் ⋆
குலை எடுத்த கதலிப் ⋆
பொழில் ஊடும் வந்துந்தி ⋆

முன் அலை எடுக்கும் புனல் காவிரி சூழ் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.6** ‖ 56

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும் ⋆
சகடமும் காலினால் ⋆
துஞ்ச வென்ற சுடர் ஆழியான் ⋆
வாழ் இடம் என்பரால் ⋆
மஞ்சு சேர் மாளிகை ⋆
நீடகில் புகையும் ⋆
மறையோர் செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.7** ‖ 57

ஏன மீன் ஆமையோடு ⋆
அரியும் சிறு குறளும் ஆய் ⋆
தானும் ஆயத் ⋆
தரணித் தலைவன் இடம் என்பரால் ⋆
வானும் மண்ணும் நிறையப் ⋆
புகுந்தீண்டி வணங்கும் ⋆
நல் தேனும் பாலும் கலந்தன்னவர் சேர் ⋆
தென் அரங்கமே ‖ **5.4.8** ‖ 58

சேயன் என்றும் மிகப் பெரியன் ⋆
நுண் நேர்மையின் ஆய ⋆
இம் மாயையை ஆரும் அறியா வகையான் ⋆
இடம் என்பரால் ⋆
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து ⋆
ஆர் புனல் காவிரி ⋆

ஆய பொன் மா மதிள் சூழ்ந்து ⋆
அழகார் தென் அரங்கமே ॥ **5.4.9** ॥ 59

‡ அல்லி மாதர் அமரும் ⋆
திரு மார்வன் அரங்கத்தை ⋆
கல்லின் மன்னு மதிள் ⋆
மங்கையர் கோன் கலிகன்றி சொல் ⋆
நல் இசை மாலைகள் ⋆
நால் இரண்டும் இரண்டும் உடன் ⋆
வல்லவர் தாம் உலகாண்டு ⋆
பின் வான் உலகாள்வரே ॥ **5.4.10** ॥ 60

அடிவரவு — உந்திமேல் வையம் பண்டு விளைத்த வம்பு கலை கஞ்சன் ஏனம் சேயன் அல்லி வெருவாதாள்

உந்திமேல் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.3 – துறப்பேன்

‡ துறப்பேன் அல்லேன் ⋆
இன்பம் துறவாது ⋆
நின் உருவம் மறப்பேன் அல்லேன் ⋆
என்றும் மறவாது ⋆
யான் உலகில் பிறப்பேன் ஆக எண்ணேன் ⋆
பிறவாமை பெற்றது ⋆
நின் திறத்தேன் ஆதன்மையால் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.1** ॥ 61

துறந்தேன் ஆர்வச் செற்றச் சுற்றம் ⋆
துறந்தமையால் ⋆
சிறந்தேன் நின் அடிக்கே ⋆
அடிமை திருமாலே ⋆
அறம் தானாய்த் திரிவாய் ⋆
உன்னை என் மனத்தகத்தே ⋆
திறம்பாமல் கொண்டேன் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.2** ॥ 62

மானேய் நோக்கு நல்லார் ⋆
மதி போல் முகத்துலவும் ⋆
ஊனேய் கண் வாளிக்கு ⋆
உடைந்தோட்டந்துன் அடைந்தேன் ⋆
கோனே ! குறுங்குடியுள் குழகா ! ⋆

திருநறையூர்த் தேனே ⋆
வரு புனல் சூழ் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.3** ॥ 63

சாந்தேந்து மென் முலையார் ⋆
தடந் தோள் புணர் இன்ப வெள்ளத்தாழ்ந்தேன் ⋆
அரு நகரத்தழுந்தும் ⋆
பயன் படைத்தேன் ⋆
போந்தேன் புண்ணியனே ! ⋆
உன்னை எய்தி என் தீ வினைகள் தீர்ந்தேன் ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.4** ॥ 64

மற்றோர் தெய்வம் எண்ணேன் ⋆
உன்னை என் மனத்து வைத்துப் பெற்றேன் ⋆
பெற்றதுவும் ⋆
பிறவாமை எம் பெருமான் ⋆
வற்றா நீள் கடல் சூழ் ⋆
இலங்கை இராவணனைச் செற்றாய் ⋆
கொற்றவனே ! ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.5** ॥ 65

மை ஒண் கருங்கடலும் ⋆
நிலனும் அணி வரையும் ⋆
செய்ய சுடர் இரண்டும் ⋆
இவை ஆய நின்னை ⋆
நெஞ்சில் உய்யும் வகை உணர்ந்தேன் ⋆
உண்மையால் இனி ⋆

யாதும் மற்றோர் தெய்வம் பிறிதறியேன் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.6** ‖ 66

வேறே கூறுவதுண்டு ⋆
அடியேன் விரித்துரைக்கும் ஆறே ⋆
நீ பணியாதடை ⋆
நின் திருமனத்து ⋆
கூறேன் நெஞ்சு தன்னால் ⋆
குணம் கொண்டு ⋆
மற்றோர் தெய்வம் தேறேன் உன்னை அல்லால் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.7** ‖ 67

முளிந்தீந்த வேங்கடத்து ⋆
மூரிப் பெருங்களிற்றால் ⋆
விளிந்தீந்த மா மரம் போல் ⋆
வீழ்ந்தாரை நினையாதே ⋆
அளிந்தோர்ந்த சிந்தை ⋆
நின்பால் அடியேற்கு ⋆
வான் உலகம் தெளிந்தே என்றெய்துவது ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.8** ‖ 68

சொல்லாய் திரு மார்வா ! ⋆
உனக்காகித் தொண்டு பட்ட நல்லேனை ⋆
வினைகள் நலியாமை ⋆
நம்பு நம்பீ ⋆
மல்லா ! குடம் ஆடீ ! ⋆
மதுசூதனே ⋆

உலகில் செல்லா நல் இசையாய் !⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.9** ॥ 69

‡ தார் ஆர் மலர்க் கமலத் ⋆
தடம் சூழ்ந்த தண் புறவில் ⋆
சீர் ஆர் நெடு மறுகில் ⋆
திருவிண்ணகரானைக் ⋆
கார் ஆர் புயல் தடக்கைக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
ஆர் ஆர் இவை வல்லார் ⋆
அவர்க்கல்லல் நில்லாவே ॥ **6.3.10** ॥ 70

அடிவரவு — துறப்பேன் துறந்தேன் மானேய் சாந்து மற்றோர் மை வேறே முளிந்தீந்த சொல்லாய் தாரார் கண்ணும்

துறப்பேன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.1 – கறவா மடநாகு

‡ கறவா மட நாகு ⋆
தன் கன்றுள்ளினாற் போல் ⋆
மறவாதடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆
நறவார் பொழில் சூழ் ⋆
நறையூர் நின்ற நம்பி ⋆
பிறவாமை எனைப் பணி ⋆
எந்தை பிரானே ! ‖ **7.1.1** ‖ **71**

வற்றா முது நீரொடு ⋆
மால் வரை ஏழும் ⋆
துற்றாக முன் துற்றிய ⋆
தொல் புகழோனே ⋆
அற்றேன் அடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆
பெற்றேன் அருள் தந்திடு ⋆
என் எந்தை பிரானே ! ‖ **7.1.2** ‖ **72**

தாரேன் பிறர்க்கு ⋆
உன் அருள் என்னிடை வைத்தாய் ⋆
ஆரேன் அதுவே ⋆
பருகிக் களிக்கின்றேன் ⋆
காரேய் கடலே மலையே ⋆

திருக்கோட்டி ஊரே ⋆
உகந்தாயை ⋆
உகந்தடியேனே ‖ **7.1.3** ‖ 73

புள் வாய் பிளந்த ⋆
புனிதா ! என்றழைக்க ⋆
உள்ளே நின்று ⋆
என் உள்ளம் குளிரும் ஒருவா ! ⋆
கள்வா ! ⋆
கடல் மல்லைக் கிடந்த கரும்பே ⋆
வள்ளால் ! உன்னை ⋆
எங்ஙனம் நான் மறக்கேனே ‖ **7.1.4** ‖ 74

வில் ஏர் நுதல் ⋆
வேல் நெடுங்கண்ணியும் நீயும் ⋆
கல்லார் கடுங்கானம் ⋆
திரிந்த களிறே ⋆
நல்லாய் ! நர நாரணனே ! ⋆
எங்கள் நம்பி ⋆
சொல்லாய் உன்னை ⋆
யான் வணங்கித் தொழும் ஆறே ‖ **7.1.5** ‖ 75

பனி ஏய் பரங்குன்றின் ⋆
பவளத் திரளே ⋆
முனியே ⋆
திருமூழிக்களத்து விளக்கே ⋆
இனியாய் ! தொண்டரோம் ⋆
பருகின் அமுதாய கனியே ⋆

உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ॥ **7.1.6** ॥ 76

கதியேல் இல்லை ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
நிதியே ! ⋆
திருநீர்மலை நித்திலத் தொத்தே ⋆
பதியே பரவித் தொழும் ⋆
தொண்டர் தமக்குக் கதியே ⋆
உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ॥ **7.1.7** ॥ 77

அத்தா ! அரியே ! என்று ⋆
உன்னை அழைக்க ⋆
பித்தா என்று பேசுகின்றார் ⋆
பிறர் என்னை ⋆
முத்தே ! மணி மாணிக்கமே ! ⋆
முளைக்கின்ற வித்தே ⋆
உன்னை எங்ஙனம் நான் ⋆
விடுகேனே ! ॥ **7.1.8** ॥ 78

தூயாய் ! சுடர் மா மதி போல் ⋆
உயிர்க்கெல்லாம் ⋆
தாயாய் அளிக்கின்ற ⋆
தண் தாமரைக் கண்ணா ! ⋆
ஆயா ! அலை நீர் உலகேழும் ⋆
முன் உண்ட வாயா ⋆

உன்னை எங்஼ஙனம் ⋆
நான் மறக்கேனே ॥ **7.1.9** ॥ 79

‡ வண்டார் பொழில் சூழ் ⋆
நறையூர் நம்பிக்கு ⋆
என்றும் தொண்டாய ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
தொண்டீர் ! இவை பாடுமின் ⋆
பாடி நின்றாட ⋆
உண்டே விசும்பு ⋆
உம் தமக்கில்லை துயரே ॥ **7.1.10** ॥ 80

அடிவரவு — கறவா வற்றா தாரேன் புள் வில் பனி கதி அத்தா தூயாய் வண்டார் புள்ளாய்

கறவா மடநாகு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 8.2 – தெள்ளியீர்

‡ தெள்ளியீர் ! ⋆
தேவர்க்கும் தேவர் திருத் தக்கீர் ! ⋆
வெள்ளியீர் ⋆
வெய்ய விழு நிதி வண்ணர் ⋆
ஓ ! துள்ளு நீர்க் ⋆
கண்ணபுரம் தொழுதாள் இவள் கள்வியோ ⋆
கைவளை கொள்வது தக்கதே ‖ **8.2.1** ‖ 81

நீணிலா முற்றத்து ⋆
நின்றிவள் நோக்கினாள் ⋆
காணுமோ ! ⋆
கண்ணபுரம் என்று காட்டினாள் ⋆
பாணனார் திண்ணம் இருக்க ⋆
இனி இவள் நாணுமோ ⋆
நன்று நன்று நறையூரர்க்கே ‖ **8.2.2** ‖ 82

‡ அருவி சோர் வேங்கடம் ⋆
நீர் மலை என்று வாய் வெருவினாள் ⋆
மெய்யம் வினவி இருக்கின்றாள் ⋆
பெருகு சீர்க் ⋆
கண்ணபுரம் என்று பேசினாள் உருகினாள் ⋆
உள் மெலிந்தாள் ⋆
இது என் கொலோ ‖ **8.2.3** ‖ 83

உண்ணும் நாள் இல்லை ⋆
உறக்கமும் தான் இல்லை ⋆
பெண்மையும் சால ⋆
நிறைந்திலள் பேதை தான் ⋆
கண்ணனூர் கண்ணபுரம் தொழும் ⋆
கார்க் கடல் வண்ணர் மேல் ⋆
எண்ணம் இவட்கு ⋆
இது என் கொலோ ‖ **8.2.4** ‖ 84

கண்ணனூர் ⋆
கண்ணபுரம் தொழும் காரிகை ⋆
பெண்மையும் தன்னுடை ⋆
உண்மை உரைக்கின்றாள் ⋆
வெண்ணெ உண்டாப்புண்ட ⋆
வண்ணம் விளம்பினாள் ⋆
வண்ணமும் ⋆
பொன் நிறம் ஆவதொழியுமே ‖ **8.2.5** ‖ 85

வட வரை நின்றும் வந்து ⋆
இன்று கணபுரம் ⋆
இடவகை கொள்வது ⋆
யாம் என்று பேசினாள் ⋆
மடவரல் மாதர் என் பேதை ⋆
இவர்க்கிவள் கடவதென் ⋆
கண் துயில் ⋆
இன்றிவர் கொள்ளவே ‖ **8.2.6** ‖ 86

தரங்க நீர் பேசினும் ⋆
தண் மதி காயினும் ⋆
இரங்குமோ ⋆
எத்தனை நாள் இருந்தெள்கினாள் ⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான் அது ⋆
தொன்மை ஊர் ⋆
அரங்கமே என்பது ⋆
இவள் தனக்காசையே ‖ **8.2.7** ‖ 87

தொண்டெல்லாம் நின் அடியே ⋆
தொழுதுய்யுமா கண்டு ⋆
தான் கணபுரம் ⋆
தொழப் போயினாள் ⋆
வண்டுலாம் கோதை என் பேதை ⋆
மணி நிறம் கொண்டு தான் ⋆
கோ இன்மை செய்வது தக்கதே ‖ **8.2.8** ‖ 88

முள் எயிறேய்ந்தில ⋆
கூழை முடி கொடா ⋆
தெள்ளியள் என்பதோர் ⋆
தேசிலள் என் செய்கேன் ⋆
கள் அவிழ் சோலைக் ⋆
கணபுரம் கை தொழும் பிள்ளையை ⋆
பிள்ளை என்றெண்ணப் பெறுவரே ‖ **8.2.9** ‖ 89

‡ கார்மலி ⋆
கண்ணபுரத்தெம் அடிகளை ⋆
பார் மலி மங்கையர் கோன் ⋆

பரகாலன் சொல் ⋆
சீர் மலி பாடல் ⋆
இவை பத்தும் வல்லவர் ⋆
நீர் மலி வையத்து ⋆
நீடு நிற்பார்களே ‖ **8.2.10** ‖ 90

அடிவரவு — தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை

தெள்ளியீர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.6 – அக்கும் புலியின்

‡ அக்கும் புலியின் ⋆
அதளும் உடையார் ⋆
அவர் ஒருவர் பக்கம் நிற்க நின்ற ⋆
பண்பர் ஊர் போலும் ⋆
தக்க மரத்தின் ⋆
தாழ் சினை ஏறி ⋆
தாய் வாயில் கொக்கின் பிள்ளை ⋆
வெள் இறவுண்ணும் குறுங்குடியே ॥ **9.6.1** ॥ 91

துங்கார் அரவத் திரை வந்துலவத் ⋆
தொடு கடலுள் ⋆
பொங்கார் அரவில் துயிலும் ⋆
புனிதர் ஊர் போலும் ⋆
செங்கால் அன்னம் ⋆
திகழ் தண் பணையில் பெடையோடும் ⋆
கொங்கார் கமலத்து ⋆
அலரில் சேரும் குறுங்குடியே ॥ **9.6.2** ॥ 92

வாழக் கண்டோம் ⋆
வந்து காண்மின் தொண்டீர்காள் ⋆
கேழல் செங்கண் ⋆
மாமுகில் வண்ணர் மருவும் ஊர் ⋆
ஏழைச் செங்கால் ⋆

இன் துணை நாரைக்கிரை தேடி ⋆
கூழைப் பார்வைக் ⋆
கார் வயல் மேயும் குறுங்குடியே ‖ **9.6.3** ‖ 93

சிர முன் ஐந்தும் ஐந்தும் ⋆
சிந்தச் சென்று ⋆
அரக்கன் உரமும் கரமும் துணித்த ⋆
உரவோன் ஊர் போலும் ⋆
இரவும் பகலும் ⋆
ஈன் தேன் முரல ⋆
மன்றெல்லாம் குரவின் பூவே தான் ⋆
மணம் நாறும் குறுங்குடியே ‖ **9.6.4** ‖ 94

கவ்வைக் களிற்று மன்னர் மாளக் ⋆
கலி மான் தேர் ஐவர்க்காய் ⋆
அன்றமரில் ⋆
உய்த்தான் ஊர் போலும் ⋆
மை வைத்திலங்கு ⋆
கண்ணார் தங்கள் மொழி ஒப்பான் ⋆
கொவ்வைக் கனிவாய்க் ⋆
கிள்ளை பேசும் குறுங்குடியே ‖ **9.6.5** ‖ 95

தீநீர் வண்ண ⋆
மா மலர் கொண்டு விரை ஏந்தி ⋆
தூநீர் பரவித் ⋆
தொழுமின் எழுமின் தொண்டீர்காள் ⋆
மாநீர் வண்ணர் ⋆
மருவி உறையும் இடம் ⋆

வானில் கூனீர் மதியை ⋆
மாடம் தீண்டும் குறுங்குடியே ‖ **9.6.6** ‖ 96

வல்லிச் சிறு நுண் இடையார் இடை ⋆
நீர் வைக்கின்ற ⋆
அல்லல் சிந்தை தவிர ⋆
அடைமின் அடியீர்காள் ⋆
சொல்லில் திருவே அனையார் ⋆
கனி வாய் எயிறொப்பான் ⋆
கொல்லை முல்லை ⋆
மெல் அரும்பீனும் குறுங்குடியே ‖ **9.6.7** ‖ 97

நாரார் இண்டை ⋆
நாண் மலர் கொண்டு நம் தமர்காள் ⋆
ஆரா அன்போடு ⋆
எம்பெருமான் ஊர் அடைமின்கள் ⋆
தாரா வாரும் ⋆
வார் புனல் மேய்ந்து வயல் வாழும் ⋆
கூர் வாய் நாரை ⋆
பேடையொடாடும் குறுங்குடியே ‖ **9.6.8** ‖ 98

நின்ற வினையும் துயரும் கெட ⋆
மா மலர் ஏந்தி ⋆
சென்று பணிமின் எழுமின் ⋆
தொழுமின் தொண்டீர்காள் ⋆
என்றும் இரவும் பகலும் ⋆
வரி வண்டிசை பாட ⋆

குன்றின் முல்லை ⋆
மன்றிடை நாறும் குறுங்குடியே ॥ **9.6.9** ॥ 99

‡ சிலையால் இலங்கை செற்றான் ⋆
மற்றோர் சின வேழம் ⋆
கொலை ஆர் கொம்பு கொண்டான் மேய ⋆
குறுங்குடி மேல் ⋆
கலை ஆர் பனுவல் வல்லான் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
நிலை ஆர் பாடல் பாடப் ⋆
பாவம் நில்லாவே ॥ **9.6.10** ॥ 100

அடிவரவு — அக்கும் துங்கார் வாழ சிரமுன் கவ்வை தீநீர் வல்லி நாரார் நின்ற சிலையால் தந்தை

அக்கும் புலியின் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.8 – காதில் கடிப்பு

‡ காதில் கடிப்பிட்டுக் ⋆
கலிங்கம் உடுத்து ⋆
தாது நல்ல ⋆
தண்ணந் துழாய் கொடணிந்து ⋆
போது மறுத்துப் ⋆
புறமே வந்து நின்றீர் ⋆
ஏதுக்கிது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.1** ‖ 101

துவர் ஆடை உடுத்து ⋆
ஒரு செண்டு சிலுப்பி ⋆
கவர் ஆக முடித்துக் ⋆
கலிக் கச்சுக் கட்டி ⋆
சுவர் ஆர் கதவின் புறமே ⋆
வந்து நின்றீர் ⋆
இவர் ஆர் இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.2** ‖ 102

கருளக் கொடி ஒன்றுடையீர் ! ⋆
தனிப் பாகீர் ⋆
உருளச் சகடம் அது ⋆
உறக்கில் நிமிர்த்தீர் ⋆
மருளைக் கொடு பாடி வந்து ⋆

இல்லம் புகுந்தீர் ⋆
இருளத்திது என் ⋆
இது என் இது என்னோ ॥ **10.8.3** ॥ 103

நாமம் பலவும் உடை ⋆
நாரண நம்பீ ⋆
தாமத் துளபம் ⋆
மிக நாறிடுகின்றீர் ⋆
காமன் எனப் பாடி வந்து ⋆
இல்லம் புகுந்தீர் ⋆
ஏமத்திது என் ⋆
இது என் இது என்னோ ॥ **10.8.4** ॥ 104

சுற்றும் குழல் தாழச் ⋆
சுரிகை அணைத்து ⋆
மற்றும் பல ⋆
மா மணி பொன் கொடணிந்து ⋆
முற்றம் புகுந்து ⋆
முறுவல் செய்து நின்றீர் ⋆
எற்றுக்கிது என் ⋆
இது என் இது என்னோ ॥ **10.8.5** ॥ 105

ஆன் ஆயரும் ⋆
ஆ நிரையும் அங்கொழியக் ⋆
கூன் ஆயதோர் ⋆
கொற்ற வில்லொன்று கை ஏந்திப் ⋆
போனார் இருந்தாரையும் ⋆
பார்த்துப் புகுதீர் ⋆

ஏனோர்கள் முன் என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.6** ‖ 106

மல்லே பொருத திரள் தோள் ⋆
மணவாளீர் ⋆
அல்லே அறிந்தோம் ⋆
நும் மனத்தின் கருத்தை ⋆
சொல்லாதொழியீர் ⋆
சொன்ன போதினால் வாரீர் ⋆
எல்லே இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.7** ‖ 107

புக்காடரவம் ⋆
பிடித்தாட்டும் புனிதீர் ⋆
இக்காலங்கள் ⋆
யாம் உமக்கேதொன்றும் அல்லோம் ⋆
தக்கார் பலர் ⋆
தேவிமார் சால உடையீர் ⋆
எக்கே ! இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.8** ‖ 108

ஆடி அசைந்து ⋆
ஆய் மடவாரொடு நீ போய் ⋆
கூடிக் குரவை பிணை ⋆
கோமளப் பிள்ளாய் ⋆
தேடித் திரு மா மகள் ⋆
மண் மகள் நிற்ப ⋆

ஏடி ! இது என் ⋆
இது என் இது என்னோ ॥ **10.8.9** ॥ 109

‡ அல்லிக் கமலக் கண்ணனை ⋆
அங்கோர் ஆய்ச்சி ⋆
எல்லிப் பொழுதூடிய ⋆
ஊடல் திறத்தை ⋆
கல்லின் மலி தோள் ⋆
கலியன் சொன்ன மாலை ⋆
சொல்லித் துதிப்பார் அவர் ⋆
துக்கம் இலரே ॥ **10.8.10** ॥ 110

அடிவரவு — காதில் துவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனாயர் மல்லே புக்கு ஆடி அல்லி புள்ளுரு

காதில் கடிப்பு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.7 – நீள் நாகம்

‡ நீள் நாகம் சுற்றி ⋆
நெடு வரை நட்டு ⋆
ஆழ் கடலைப் பேணான் கடைந்து ⋆
அமுதம் கொண்டுகந்த பெம்மானை ⋆
பூண் ஆர மார்வனைப் ⋆
புள் ஊரும் பொன் மலையை ⋆
காணாதார் கண் என்றும் ⋆
கண் அல்ல கண்டாமே ‖ **11.7.1** ‖ 111

நீள் வான் குறள் உருவாய் ⋆
நின்றிரந்து மாவலி மண் ⋆
தாளால் அளவிட்ட ⋆
தக்கணைக்கு மிக்கானை ⋆
தோளாத மா மணியைத் ⋆
தொண்டர்க்கினியானை ⋆
கேளாச் செவிகள் ⋆
செவி அல்ல கேட்டாமே ‖ **11.7.2** ‖ 112

தூயானைத் ⋆
தூய மறையானை ⋆
தென் ஆலி மேயானை ⋆
மேவாள் உயிர் உண்டமுதுண்ட வாயானை ⋆
மாலை வணங்கி ⋆

அவன் பெருமை பேசாதார் ⋆
பேச்சென்றும் ⋆
பேச்சல்ல கேட்டாமே ॥ **11.7.3** ॥ 113

கூடா இரணியனைக் ⋆
கூர் உகிரால் மார்விடந்த ⋆
ஓடா அடல் அரியை ⋆
உம்பரார் கோமனை ⋆
தோடார் நறுந் துழாய் ⋆
மார்வனை ஆர்வத்தால் ⋆
பாடாதார் பாட்டென்றும் ⋆
பாட்டல்ல கேட்டாமே ॥ **11.7.4** ॥ 114

மை ஆர் கடலும் ⋆
மணி வரையும் மா முகிலும் ⋆
கொய் ஆர் குவளையும் ⋆
காயாவும் போன்றிருண்ட மெய்யானை ⋆
மெய்ய மலையானைச் ⋆
சங்கேந்தும் கையானை ⋆
கை தொழா ⋆
கை அல்ல கண்டாமே ॥ **11.7.5** ॥ 115

கள் ஆர் துழாயும் ⋆
கண வலரும் கூவிளையும் ⋆
முள் ஆர் முளரியும் ⋆
ஆம்பலும் முன் கண்டக்கால் ⋆
புள் ஆய் ஓர் ஏனம் ஆய்ப் ⋆
புக்கிடந்தான் பொன் அடிக்கென்று ⋆

உள்ளாதார் உள்ளத்தை ⋆
உள்ளமாக் கொள்ளோமே ‖ **11.7.6** ‖ 116

கனை ஆர் கடலும் ⋆
கருவிளையும் காயாவும் அனையானை ⋆
அன்பினால் ஆர்வத்தால் ⋆
என்றும் சுனை ஆர் மலர் இட்டுத் ⋆
தொண்டராய் நின்று நினையாதார் ⋆
நெஞ்சென்றும் ⋆
நெஞ்சல்ல கண்டாமே ‖ **11.7.7** ‖ 117

வெறி ஆர் கருங்கூந்தல் ⋆
ஆய்ச்சியர் வைத்த ⋆
உறி ஆர் நறு வெண்ணெய் ⋆
தான் உகந்துண்ட சிறியானை ⋆
செங்கண் நெடியானைச் ⋆
சிந்தித்தறியாதார் ⋆
என்றும் அறியாதார் கண்டாமே ‖ **11.7.8** ‖ 118

‡ தேனொடு வண்டாலும் ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
தான் இடமாக் கொண்டான் ⋆
தட மலர்க் கண்ணிக்காய் ⋆
ஆன் விடை ஏழ் அன்றடர்த்தாற்கு ⋆
ஆள் ஆனார் அல்லாதார் ⋆
மானிடவர் அல்லர் என்று ⋆
என் மனத்தே வைத்தேனே ‖ **11.7.9** ‖ 119

‡ மெய்ந் நின்ற ⋆
பாவம் அகல ⋆
திருமாலைக் கைந் நின்ற ஆழியான் ⋆
சூழும் கழல் சூடி ⋆
கைந் நின்ற வேற்கைக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
ஐ ஒன்றும் ஐந்தும் ⋆
இவை பாடி ஆடுமினே ‖ **11.7.10** ‖ 120

அடிவரவு — நீள்நாகம் நீள்வான் தூயான் கூடா மையார் கள்ளார் கனை வெறி தேனொடு மெய் மாற்றம்

நீள் நாகம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.8 – மாற்றமுள

‡ மாற்றம் உள ⋆
ஆகிலும் சொல்லுவன் ⋆
மக்கள் தோற்றக் குழி ⋆
தோற்றுவிப்பாய் கொல் என்றின்னம் ⋆
ஆற்றங்கரை வாழ் மரம் போல் ⋆
அஞ்சுகின்றேன் ⋆
நாற்றச் சுவை ⋆
ஊறொலி ஆகிய நம்பீ ! ॥ **11.8.1** ॥ 121

சீற்றம் உள ⋆
ஆகிலும் செப்புவன் ⋆
மக்கள் தோற்றக் குழி ⋆
தோற்றுவிப்பாய் கொல் என்றஞ்சி ⋆
காற்றத்திடைப்பட்ட ⋆
கலவர் மனம் போல ⋆
ஆற்றத் துளங்கா நிற்பன் ⋆
ஆழி வலவா ! ॥ **11.8.2** ॥ 122

தூங்கார் பிறவிக்கள் ⋆
இன்னம் புகப் பெய்து ⋆
வாங்காய் என்று சிந்தித்து ⋆
நான் அதற்கஞ்சி ⋆
பாம்போடொரு கூரையிலே ⋆

பயின்றாற் போல் ⋆
தாங்காதுள்ளம் தள்ளும் ⋆
என் தாமரைக் கண்ணா ! ‖ **11.8.3** ‖ 123

உருவார் பிறவிக்கள் ⋆
இன்னம் புகப் பெய்து ⋆
திரிவாய் என்று சிந்தித்தி ⋆
என்றதற்கஞ்சி ⋆
இருபாடெரி கொள்ளியின் ⋆
உள் எறும்பே போல் ⋆
உருகா நிற்கும் என் உள்ளம் ⋆
ஊழி முதல்வா ! ‖ **11.8.4** ‖ 124

கொள்ளக் குறையாத ⋆
இடும்பைக் குழியில் ⋆
தள்ளி புகப் பெய்தி கொல் ⋆
என்றதற்கஞ்சி ⋆
வெள்ளத்திடைப்பட்ட ⋆
நரி இனம் போலே ⋆
உள்ளம் துளங்கா நிற்பன் ⋆
ஊழி முதல்வா ! ‖ **11.8.5** ‖ 125

படை நின்ற ⋆
பைந் தாமரையோடு ⋆
அணி நீலம் மடை நின்றலரும் ⋆
வயலாலி மணாளா ⋆
இடையன் எறிந்த மரமே ⋆
ஒத்திராமே ⋆

அடைய அருளாய் ⋆
எனக்குந்தன் அருளே ॥ **11.8.6** ॥ 126

‡ வேம்பின் புழு ⋆
வேம்பன்றி உண்ணாது ⋆
அடியேன் நான் பின்னும் ⋆
உன் சேவடி அன்றி நயவேன் ⋆
தேம்பல் இளந் திங்கள் ⋆
சிறை விடுத்து ⋆
ஐவாய்ப் பாம்பின் அணைப் ⋆
பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ ! ॥ **11.8.7** ॥ 127

‡ அணியார் பொழில் சூழ் ⋆
அரங்க நகர் அப்பா ⋆
துணியேன் இனி ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
மணியே ! மணி மாணிக்கமே ! ⋆
மதுசூதா ⋆
பணியாய் எனக்குய்யும் வகை ⋆
பரஞ்சோதீ ! ॥ **11.8.8** ॥ 128

‡ நந்தா நரகத்து ⋆
அழுந்தா வகை ⋆
நாளும் எந்தாய் ! தொண்டர் ஆனவர்க்கு ⋆
இன் அருள் செய்வாய் ⋆
சந்தோகா ! தலைவனே ! ⋆
தாமரைக் கண்ணா ⋆

அந்தோ ! அடியேற்கு ⋆
அருளாய் உன் அருளே ॥ **11.8.9** ॥ 129

‡ குன்றம் எடுத்து ⋆
ஆனிரை காத்தவன் தன்னை ⋆
மன்றில் புகழ் ⋆
மங்கை மன் கலிகன்றி சொல் ⋆
ஒன்று நின்ற ஒன்பதும் ⋆
வல்லவர் தம்மேல் ⋆
என்றும் வினை ஆயின ⋆
சாரகில்லாவே ॥ **11.8.10** ॥ 130

அடிவரவு — மாற்றம் சீற்றம் தூங்கார் உருவார் கொள்ள படை வேம்பின் அணியார் நந்தா குன்றம் நிதியினை

மாற்றமுள முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்